S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5.00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளைக் சரியாகக் கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பேர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2202 ஐப்பசி 29 வெள்ளிக்கிழமை [15-11-1991] UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 346

உணவு நெருக்கடி நிலையை நீக்குவதற்கு பெரும் முயற்சி!

உடனடியாக மேற்கொள்வதாக ஆணையாளர் நேசையா உறுதி

முச்சந்தி முரளி

யாழ்ப்பாணம், நவம்பர் 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் உணவு நெருக்கடி தோன்றியுள்ளதை நன்றாக அவதானிக்கவும், உணரவும் முடிகிறது. இந்நிலையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை, கொழும்பு திரும்பியதும் உடனடியாக மேற்கொள்வேன்.

— இவ்வாறு உறுதியளித்தார் அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் டாக்டர் தேவநேசன் நேசையா.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இங்கு வந்த அவர், குடாநாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு, மருந்துத் தட்டுப்பாடு மற்றும் முக்கிய துறைகளில் உள்ள குறைபாடுகள் குறித்து அரசாங்கத்துக்கு பூரணமான தும், விளக்கமானதுமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளார்.

அதன் பொருட்டு உணவுப் பொருள் தருவிப்பு, விநியோகம் சம்பந்தப்பட்ட அரசாங்கத் திணைக்களங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி விவரங்களை அறிந்து கொண்டார். அதேபோல மருந்து தருவிப்பு, விநியோகம் சம்பந்தப்பட்டவர்களுடனும் கலந்துரையாடினார்.

அந்தக் கலந்துரையாடலில் பிரதேச டாக்டர் தேவநேசன் நேசையா உதயனுக்கு அவித்த பேட்டியில் தெரிவித்ததாவது—

யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களில் முன்றில் ஒரு பகுதி, கப்பல் மூலம் அனுப்பப்படுகிறது.

அடுத்த முன்றில் ஒரு பங்கு உணவுப் பொருள்கள் தரை மார்க்கமாக வந்து சேர்கின்றன. மிகுதியான முன்றில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

அப்ப... பட்டினியும் வெள்ளமுமத்தான் செய்தி என்டு சொல்லுங்கோ...!

வடக்கே உணவுப் பற்றாக்குறை; பத்து லட்சம் மக்கள் பாதிப்பு!

இலங்கையின் வடபகுதியில் பெரும் உணவுப் பற்றாக்குறை நிலவுகிறது என்றும், இந்த வாரமும் சுமார் 10 லட்சம் மக்களுக்கு கடந்த கிழமை வாரங்களாக உணவுப் பொருள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது.

உள்நாட்டுப் போரினால் இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான மக்கள் இலங்கையிலேயே அகதிகளாக இருந்து வருகின்றனர் என்றும்—

ஆயிரக்கணக்கான வீடுகள் அழித்து சேதப்படுத்தப்பட்டுவிட்டதால் வருவாய் எதுவும் இன்றி அல்லல்படுகின்றனர் என்றும்— பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. (இ)

செட்டிகுளம் ராணுவம் மீது புலிகள் புதனிரவு தாக்கு!

கொழும்பு, நவ 15

மதவாச்சி — மன்னார் வீதியிலுள்ள செட்டிகுளம் இராணுவ பாதுகாப்பு நிலைகள் மீது நேற்று முன்தினம் (புதன்) இரவு 10 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று கொழும்பில் இராணுவப் பேச்சாளர் கேர்னல் சரத் முனசிங்க செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை படையினர் முறியடித்து விட்டனர் என்றும் அவர் கூறினார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து விவரம் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவேளை, செட்டிகுளத்தில் நடந்த தாக்குதலில் கிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-3)

இன்றைய எழுச்சிகூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ 15

இன்று ஆரம்பமாகும் மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில், பிரிவு வாரியாக எழுச்சிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய மூன்று பிரிவுகளிலும், இன்று தொடக்கம் இருபதாம் திகதி வரை நாளாந்தம் எழுச்சி வாரக் கூட்டங்கள் நடை

[4 ஆம் பக்கம் பார்க்க]

தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரின் உறவினர்கள் விரைவில் யாழ். வருவர்!

யாழ்ப்பாணம், நவ. 15

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படையினர் 42 பேரையும் சந்திப்பதற்காக அவர்களது உறவினர்கள் விரைவில் யாழ்ப்பாணம் வருவார்கள்.

அவர்களை யாழ்ப்பாணம் கூட்டி வருவது குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் கொழும்பில் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்தி வருகிறார்கள்.

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும். செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பிரதிநிதி திரு. கிளாடியோவ் பீரான்ஸினி இன்னும் சில தினங்களில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

இன்று முதல் எழுச்சி வாரம்

யாழ்ப்பாணம், நவ. 15

மாவீரர் வாரத்துக்கு முந்திய மாவீரர் எழுச்சி வாரம் இன்று ஆரம்பமாகிறது.

இம்மாதம் 21 ஆம் திகதி வரையான எழுச்சி வார காலத்தில் தமிழீழப் பிரதேசம் முழுவதையும் புனிதமாக வைத்திருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று மாவீரர் நாள் குழு தெரிவித்துள்ளது.

வீடுகள், வீதிகள், ஒழுங்கைகள் யாவற்றையும் துளித்தும், ஒன்று சேர்த்தும் புனிதமாக்குவதற்கான ஒழுங்குகளை மக்கள் மாவீரர் எழுச்சி வாரத்தில் செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இராணுவ தொடரும் நிரவப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

யாழ். குடாநாட்டில் நேற்று காற்றுடன் கூடிய கடும் மழை!

குளங்கள் நிரம்பின; பல பகுதிகளில் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ. 15

நேற்று முன்தினம் முதல் நேற்று இரவு வரை கடும் காற்றுடன் தொடர்ந்து பெய்த மழையினால் குடாநாட்டின் பல பகுதிகள்-குறிப்பாகத் தாழ்ந்த பகுதிகள்-வெள்ளத்தில் மூழ்கின.

பல இடங்களில் பெரிய மரங்கள் காற்றுக்கும் மழைக்கும் ஈடுகொடுக்க முடியாது சரிந்து வீழ்ந்தன.

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக நின்ற பெரிய பூவரசை மரம் நேற்று முற்பகல் வேருடன் பெயர்ந்து விழுந்தது. இதனால் கல்லூரியின் முன் சுற்றுப் பிரகாரமதில் இடிந்து விழுந்து கிடக்கக் காணப்பட்டது. மின் கம்பிகளும் அறுந்து விழுந்தன.

நகரின் பழைய புகையிரத வீதி மருங்கில் நின்றிருந்த, பழமையான பெரிய மரம் ஒன்று வேருடன் பெயர்ந்தன்று. (மரத்தின் வேர்ப் பகுதிகள் கிளறி எடுக்கப்பட்டு, அந்த இடத்தில் சமார் பத்து அடி அகலமான குழி ஏற்பட்டுள்ளது.

நகரில் ரயில் நிலையச் சந்திப் பக்கமாக நின்றிருந்த இன்னொரு பெரிய மரமும் வீதிக்குக் குறுக்கே சாய்ந்து கிடந்தது.

குடாநாட்டில் உள்ள குளங்கள் பலவும் நிரம்பி வழிகின்றன; வயல் நிலங்களும் வெள்ளக் காடாகக் காட்சியளித்தன.

வீதிகளுக்கு குறுக்காகவும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

வழமை நிலை பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

நேற்றுப் பெய்த கடும் மழையினால் குடாநாட்டில் வழமை நிலை பாதிக்கப்பட்டது.

அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் ஊழியர், பொது மக்கள் வரவின்மையால் செயல் இழந்து கிடந்தன.

நகரில் அனேகமான கடைகள் மூடப்பட்டிருந்தன. எழமையாக மக்கள் கூடும் சந்தை போன்ற பொது இடங்களும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

வீதிகளிலும் மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாக இருந்தது.

அனேகமான பாடசாலைகளில் மாணவர் வரவின்மையால் வகுப்புகள் நடைபெறவில்லை. எனினும் சில பாடசாலைகளில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

(உ-5-143)

ஈழ அகதிகள் 3 ஆயிரம் பேர் நாடு திரும்புவர்

கொழும்பு, நவ. 15

தமிழ் நாட்டில் உள்ள ஈழ அகதிகள் நாடு திரும்பும் பட்சத்தில் அவர்களை வரவேற்க மன்னாரிலும், திருகோணமலையிலும் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் தமிழ்நாட்டில் உள்ள சுமார் இரண்டு லட்சம் ஈழ அகதிகளில் மூவாயிரம் பேர் மட்டும் இலங்கை திரும்புவதற்கு எழுத்து மூலம் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று பி. பி. ஸி. தெரிவிக்கிறது. (இ)

இந்தியாவில் நாளையதினம் குட்டிப் பொதுத் தேர்தல்!

புதுடில்லி, நவ. 15

இந்தியாவில் 15 லோக சபைத் தொகுதிகளுக்கும் 57 சட்டசபைத் தொகுதிகளுக்குமான இடைத்தேர்தல் கள் நாளை சனிக்கிழமை நடைபெறுகின்றன.

இந்த இடைத்தேர்தல்களில் பிரதமர் பி. வி. நரசிம்மராவ், பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் ஆகியோரும் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

திரிபுரா மாநிலத்தின் அகர்தலா தொகுதியில் பாரதிய ஜனதாக் கட்சி வேட்பாளர் ஒருவர் நேற்று முன்தினம் கட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன் துறைமுகத்துக்கு கப்பல்: யாழ். அரச அதிபர் கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், நவ. 15

வடக்கிலிருந்து வரும் உணவுக் கப்பல்களை காங்கேசன் துறை துறைமுகத்துக்குக் கொண்டு வந்து அங்கு உணவுப் பொருள்களை இறக்குவது குறித்து அரசாங்க உயர் மட்டத்தினருடன் பேச்சு நடத்துவதற்காகவே யாழ். அரச அதிபர் கொழும்பு சென்றிருக்கிறார். நம்பத்தகுந்த வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

அரச அதிபர் திரு. வாமதேவன் நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பலூடாக காங்கேசன்துறைக்குச் சென்று அங்கிருந்து பலாலி விமான நிலையம் ஊடாக நேற்று விமானத்தில் கொழும்பு பயணமானார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ். கிளையைப் பிரதிநிதி கொழும்பில் தங்கியுள்ளார். காங்கேசனுக்கு உணவுக் கப்பலைக் கொண்டுவருவது குறித்து அவர் அரசடன் விரிவாகப் பேச்சு நடத்துகிறார்.

இது குறித்து மேல் விவரங்களை அறிவதற்கும், யாழ். அரச அதிபரின் கருத்துக்களைக் கேட்டறிவதற்கு மாகவே அரசாங்கம் திருமாணிக்கவாசகரைக் கொழும்புக்கு அழைத்ததாகத் தெரிய வருகிறது.

அரசடன் இதுவிடயமாகப் பேச்சு நடத்தியிட்டு அனேகமாக அடுத்த வாரத்தில் அரச அதிபர் யாழ். திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

உணவுப் பொருள் இறக்கம்; விரைவில் காங்கேசனில்!

யாழ்ப்பாணம், நவ. 15

காங்கேசன்துறை துறைமுகம் வழியாக உணவுப் பொருள்களை இறக்கும் வேலை அனேகமாக அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பமாகும்.

கொழும்பில் இது தொடர்பாக — சமரசமான — பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் வெற்றியளிக்கும் பட்சத்தில் உணவுப் பொருள்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்குவதற்கான முதற் கப்பல் இன்னும் இரண்டு வாரங்களில் வடக்கு நோக்கி புறப்படும் என்றெதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

60 படையினரின் அஸ்திகள் ஒன்றாக நேற்று அடக்கம்!

கொழும்பு, நவ. 15

வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் போது மரணமான சுமார் 60 பாதுகாப்பு படையினரின் அஸ்திகள் நேற்றுப் பிற்பகல் கனத்த மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டன. இந்தக் கடமை இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

நல்லடக்கம் செய்யப்படும் இடத்தில் விசேட நினைவுத் தூபியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

உயிரிழந்த படை வீரருக்கு அஞ்சலி செலுத்தும் இந்த நிகழ்ச்சியில் முப்படைகளின் தளபதிகள் கப்பட [illegible] லந்து கொண்டார் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

தேவை

நியூட்கிரி வாங்கு, மேசை கடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: விக்னா கல்வி நிறுவனம், 53, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சி 0795]

திருநீற்றுப் பச்சை இலை களும், துளசி இலைகளும் தேவை. விலை கொடுத்து வாங்கப்படும். அண்ணா தொழிலகம், இணுவில்.
[சி/0792]

வினாத்தாள் ஆண்டு (4, 5)

புலமைப்பரிசில், பிரபல பாடசாலை அனுமதி மாதிரி வினாத்தாள்களை மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்: ஆண்டு 4 வினாத்தாள் 17-11-1991 ஞாயிறு வெளி யிடப்படும். பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(18743)

சோதிடம்

கல்வியில் தெளிவா? உத்தி யோகம் கிடைக்குமா? விவா கம் நடைபெறுமா? வெளி நாடு போகலாமா? உரிய பதில் தருவோம். ஜாதகம், குறிப்பு, கைரேகை, விவாகப் பொருத்தம், எண்சோதிடம் பார்க்க தொடர்பு: த. சிவா னந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 354, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
[18739]

ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின் றன. ரைப்ரைட்டர் நியன் கலை விற்பனைக்கு உண்டு. பியூட்டா, 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 3 ஆம் ஒழுங்கை, கிளை பிர தான வீதி, மாவிட்டபுரம்.
(சி/0791)

C.C.A.

யாழ்ப்பாணம்
வெளிநாட்டுச் சந்திக்கு
அருகாமை

A/L 91
வினா-விடை
புதிய பிரிவு III
ஆரம்பம் 18-11-91

கடந்த 15 வருட வினா-விடை ஆரம்பத்தில் இருந்து நடைபெறும்.

பொருளியல் — 1-2
கணக்கியல் — 2-3
வர்த்தகம் — 12-1

ஏனைய பிரிவுகளுக்கு அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.
(சி/0793)

உள்ளூரில் உற்பத்தி விடுதலைக்கு உயிர்நாடி.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை.

நிறைவேற்றுத் திட்டமிடல் அதிகாரி

எமது பணிமனையில் திட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்தக் கடியவாறான திறந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வி, தகுதி, ஆற்றல், அனுபவம், திட்டங்களை நிறைவேற்றும் தகைமை, நிர்வாகத் திறமை, வெளி நாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் தகைமை, சேவை செய்யும் ஆற்றல் உள்ளோர் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடைசித் திகதி 20-11-1991 நேர்முகப் பரீட்சை 21-11-1991 முற்பகல் 9-00 மணிக்கு நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்(0060/சு) திகதி 12-11-1991

தமிழ் வல்லுனர் தேவை

தமிழாக்கம் செய்யப்பட்ட விடயங்களில் இலக் கண, இலக்கிய தவறுகளை சரிபார்க்க வல்லுனர்கள் தேவை.

தொடர்பு:
விள. இல. 367, மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(18747)

ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 13 — 03 — 1939

அமிழ்பு: 28 — 10 — 1990

அமரர்
வல்லிபுரம் செல்வநாயகம்
[யாழ். பிரதான கிளை முகாமையாளர்]

திதி: 15 — 11 — 1991

எல்லோர்க்கும் இனியவனாய்
எமையெல்லாம் காப்பவனாய்
என்றென்றும் இருந்தீர் அருமை அப்பாவே!
ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் மறைவினை,
ஓர் நிமிடம் என இன்னமும் நம்ப மறுக்கும்
எமது இதயங்களில் என்றென்றும் நிலைத்திருந்து
நல்வழி காட்ட வேண்டுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திரு வருளைப் பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

வட்டு. தென் மேற்கு,
வட்டுக்கோட்டை.
[18744]

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி வேர்ஜனி சேவியர்

மறைவு: 15 - 11 - 1987

நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்ததம்மா
நான்கு நிமிட வாழ்வை மீட்டதம்மா
நாவிலும் நன்னெஞ்சிலும் உம் நினைவலைகள்
நிலைக்க நாலாயிரம் ஆண்டுகள் வேண்டும் அம்மா.

பிரார்த்தனை;
அன்புக் கணவன், பிள்ளைகள்,
தாய், சகோதரர், உறவினர்கள்.

40, ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம்.
(18746)

வீட்டுச் சூழல் அபிவிருத்திப் போட்டி சிறுபோகம் - 1991 யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கமாகவும், எமது மாவட்டத்தில் வாழும் மக்களின் வீட்டுச் சூழலின் அபிவிருத்தியை, பராமரிப்பை, ஊக்குவிக்கவும் எம் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதோடு போஷாக்கு உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் மேற்படி போட்டியை எமது மாவட்டத்தில் நடத்தி பெறுமதிவாய்ந்த பரிசில்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் எவரும் பங்குபற்றலாம்.

நிபந்தனைகள் வருமாறு:

அ. விண்ணப்ப முடிவு திகதி: 30 — 11 — 1991

அனுப்பவேண்டிய முகவரி: பிரிவு உதவி அரசாங்க அதிபருக்கு

குறிப்பு: விண்ணப்பப்படிவம் ஏதுமில்லை. விண்ணப்பதாரிகள் சாதாரண தாளில் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம். போட்டி நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதாகவும், போட்டியை ஒழுங்கு செய்வோர் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதாகவும் விண்ணப்பத்தில் பிரகடனம் செய்ய வேண்டும். போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் பின்வரும் அம்சங்களை தனது வீட்டுச் சூழலில் ஏற்படுத்தி மதிப்பளித்து இடம்பெறுதல் வேண்டும்.

1. பயிர்கள்

பருப்புவகை: குறைந்தது 1/8 பரப்பில் பாசிப்பயறு செய்கை பண்ணுவது விரும்பத்தக்கது.

மரக்கறிவகை: ஒரு இலை மரக்கறி உட்பட ஏதேனும் நான்கு உள்ளூர் மரக்கறிப் பயிர்கள். ஒரு பயிரின் குறைந்த பரப்பளவு 15'x10'

கிழங்குவகை: மரவள்ளி/வற்றாளை - குறைந்தது 30 சதுர அடி.

பழ மரம்: பப்பாளி 3 - 5 மரங்கள்
வாழை 2 - 3 நிலைகள்

பிற பயனுள்ள மரங்கள்:

எலுமிச்சை — குறைந்தது 1 முருங்கை — குறைந்தது 1
அத்தி — குறைந்தது 1 இப்பில் இப்பில் — குறைந்தது 3

நளபாடங்களுக்குரிய மரம்:
வேம்பு, தேக்கு வேலிமரமாக;

வேறு பொருளாதார முக்கியத்துவமான மரங்கள்:
தென்னை — குறைந்தது 03 பனை (வேலியில்) — குறைந்தது 05
கமுகு — குறைந்தது 03

2. கூட்டெரு தயாரிப்பு:
குழியல் / குழி - 15 x 8 (குறைந்தது ஒன்று)

3. மாடு / ஆடு / கோழி வளர்ப்பு:
குடும்ப அங்கத்தவர்களுடைய தேவையையேனும் பூர்த்தி செய்யக் கூடிய முயற்சியாக இருக்க வேண்டும்.

குறிப்பு: பொருத்தமான கூறையிடம் இருத்தல் அவசியம்.

ஆ. போட்டியின் பின்வரும் மட்டங்களில் மதிப்பீடு செய்யப்படும்

மட்டம்	பார்வையிடும் திகதி
1. உற்பத்திக் குழு மட்டம் 2. உதவி அரசாங்க அதிபர் மட்டம் 3. மாவட்டக் குழு மட்டம்	ஜனவரி 21 ஆம் திகதி தொடக்கம் மாசி 15 ஆம் திகதி வரை

இ. பரிசில்கள்:
குறிப்பு:
1. பணமாக / பொருள்களாக வழங்கப்படும்.
2. பின்வரும் தொகைகளுக்குக் குறையாத பெறுமதியுள்ள பரிசில்கள் வழங்கப்படும்:

மட்டம்	பெறுமதி
	1 ஆம் இடம், 2 ஆம் இடம், 3 ஆம் இடம்
1. உற்பத்திக் குழு மட்டம் 2. உதவி அரசாங்க அதிபர் மட்டம் 3. மாவட்டக் குழு மட்டம்	மூன்று இடங்களுக்கும் உரிய பரிசில்கள் வழங்கப்படும்

எமது இம் முயற்சியில் பெரும்பங்கு பெற்று எமது மாவட்ட வளர்ச்சிக்கு உதவுமாறு எமது மாவட்ட மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செயலகம்,
நாற்பொன்னம்

கா. மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
யாழ் மாவட்டம். சி-0880

இணைய சேவைகளுக்கு அங்கத்துவ நிறுவனங்களின் வாழ்த்துக்கள்

★

அகில உலக கெயர்
CARE INTL.

போரூட்
FORUT

மெதடிஸ்த திருச்சபை
Methodist Mission

றெட்பார்ணா
Redd Barna

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83
R.R.F. 83

சிறுவர் பாதுகாப்பு நிதியம் [ஐ.இ]
S.C.F. (U.K.)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
TRRO

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

முதலாவது ஆண்டு நிறைவு நாள்

15 - 11 - 1991

எமது இணைய செயற் திட்டங்கள்

★ அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒருங்கிணைப்பு
★ இடம்பெயர்ந்தோருக்கான அவசர உதவிகள்
★ இடம்பெயர்ந்தோருக்கான தற்காலிக இருப்பிட வசதிகள்
★ தகவல் தரவுப் பிரிவு
★ ஆவணத் தொகுப்பு
★ அரச நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தல்
★ மக்கள் தொடர்புகளை மேம்படுத்தல்
★ உணவு உற்பத்தி ஊக்குவிப்பு
★ சுகாதாரப் பொதுமக்கள் ஊக்குவிப்பு

யாழ்.மாவட்ட புனர்வாழ்வுத் திட்டங்களை சீரமைக்க நாம் ஒன்றிணைவோம்! சேவை செய்வோம்!!

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
இல. 100, சீலன் வீதி,
இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
[சி-0893]

இணையம் வளர அங்கத்துவ நிறுவனங்களின் வாழ்த்துக்கள்

★

தென்னிந்திய திருச்சபை
C.S.I.

மனித முன்னேற்ற நடுநிலையம்
HUDEC

அறவழி போராட்டக் குழு
NVDAG

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
Red Cross

சர்வோதயம்
Sarvodaya

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
TRO

வாலிபர் கிறிஸ்தவ சங்கம்
YMCA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவிரோதமாக பிரான்ஸுக்குள் நுழைவோரைத் தடுக்க விசேட சட்டம்

ஏற்றி வரும் விமான நிறுவனங்களுக்கும் இனிமேல் அபராதம்

பாரிஸ், நவ. 15

பிரான்ஸ் நாட்டுக்குள் சட்ட விரோதமாகக் குடியேற முற்படுவோரை ஏற்றி வரும் விமான சேவையினருக்கும், ஏனைய போக்குவரத்து ஏஜென்சிகளுக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

இதற்கான சட்டத்தை அரசு சமர்ப்பித்துள்ளதாக பிரெஞ்சு உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக ஆட்களைக் கொண்டு வரும் விமானங்களுக்கு 1,800 டொலர் வரையில் அபராதம் விதிக்கப்பட உள்ளது.

சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களுக்கு தொழில் வழங்கும் வேலைவாய்ப்போர் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கான சட்டம் ஒன்றினை பிரெஞ்சு அரசாங்கம் கடந்த மாதம் அங்கீகரித்தது

இதேவேளை—

பிரெஞ்சு பிரதம மந்திரி இவ் வருட ஆரம்பத்தில் தெரிவித்த ஆலோசனை ஒன்றில் சட்டவிரோத குடியேற்றவாசிகளைத் திருப்பி அனுப்ப விசேட விமானங்களை வாடகைக்கு அமர்த்துவது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். எனினும் இந்த ஆலோசனை அமுல் செய்யப்படவில்லை. [த]

8 பேர் கைது

சென்னை, நவ. 15

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகக் கூறப்படும் எட்டுப் பேரை பயங்கரவாத பிரிவினைவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழகப் பொலீஸார் கைது செய்தனர்.

வர்த்தக வங்கி சம்பியனானது

ஹட்டன் நஷனல் வங்கி ஆதரவில் வங்கிகளுக்கிடையே நடைபெற்று வந்த குரியகுமாரன் ஞாபகார்த்தமென்பந்து கிரிக்கெட் கற்றுப் போட்டியில் யாழ். வர்த்தக வங்கி சம்பியனானது.

யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரி மைதானத்தில் கடந்த சனியன்று நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் மகளிர் வங்கியின் 'பி' அணியுடன் வர்த்தக வங்கி மோதியது. [இ]

யாழ். செயலகத்தில் கடவுச்சீட்டுப் படிவம்

யாழ்ப்பாணம், நவ. 15

கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்கள் கொழும்பிலிருந்து யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

விண்ணப்பதாரர்கள் செயலக புத்தகசாலையில் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து இலவசமாக ஒரு படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை இன்றி பரீட்சை எழுத முடியாது

அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை இல்லாமல் எவரும் இம்முறை ஜி. சி. ஈ. பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் அடையாள அட்டை, தபால் திணைக்களத்தால் வழங்கப்படும் அடையாள அட்டை அல்லது பாஸ்போர்ட் இவற்றில் ஏதாவது ஒன்றை பரீட்சார்த்திகள் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படத்தை மட்டும் சமர்ப்பிப்போர் பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் —

கடந்த காலங்களில் இதற்கு அனுமதி வழங்கிய தால் பல ஊழல்கள் இடம் பெற்றன என்றும் —

கடந்த வருடப் பரீட்சையில் 859 ஆள் மாறாட்டம் சம்பவங்கள் இடம்பெற்றன என்றும் — பரீட்சை ஆணையாளர் ஆரான் வெதமுல்ல தெரிவித்துள்ளார். (இ-த)

பாதுகாப்புச் செலவு: 1 சதவீதம் தீர்வை

கொழும்பு, நவ. 15

பொருள்களை உற்பத்தி செய்வோர் மீதும் இறக்குமதி செய்வோர் மீதும் 1992 ஜனவரி மாதம் தொடக்கம் பாதுகாப்பு செலவீனத் தீர்வையாக ஒரு சதத் தீர்வை அறவிடப்படும்.

இப்படி பிரதமரும் நிதி அமைச்சரும் பாதுகாப்புத் துறை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா 1993 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

உணவுப் பொருள்: பழுதடைந்தது

கடலைப் பருப்பு, மரவள்ளி மாவு முதலான பொருள்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [த]

கோட்ட ரீதியில் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 15

கல்வி அபிவிருத்தியை மேம்படுத்த திட்டமிடல் அதிகாரிகள் மாவட்ட மற்றும் கோட்ட மட்டத்தில் நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

வடக்கு — கிழக்கு மாகாண சபையால், பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கற்று நிறுவத்திற்கு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் அதிகாரிகளாக நியமிக்கக் கூடியவர்களின் விவரங்களை அனுப்புமாறு பிராந்தியப் பணிப்பாளர்கள் வேண்டப்பட்டுள்ளனர். [உ-3]

மாவீரர் நாள் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, நவ. 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் "மாவீரர் நாள்" கொண்டாடுவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது. [த]

பரிசளிப்பு விழா

அக்கரவேலி, நவ. 15

அக்கரவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவும் ஸ்நாபகர் தினவு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் நடைபெறும். (உ-119)

தருமப் பணம்

யாழ்ப்பாணம், நவ. 15

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலே தங்கியுள்ளோருக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணம் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது.

வேலணை உதவி அரச அதிபர் பிரிவில் கீழ் உள்ள பகுதிகளைச் சேர்ந்த நிலை மக்களுக்கு யாழ்ப்பாணம் அடைக்கலமாதா தேவாலயத்தில் அண்மையில் தந்தாலிய மாக இயங்கி வரும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-131]

உதயன்

தயாராகுதல் அவசியம்

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நிறுவப்பட்டு இன்று ஒரு வருடம் நிறைவுறுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு, கஷ்டப்படும் மக்களுக்கு, வசதியற்ற மக்களுக்குக் கைகொடுப்பதையும், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவுவதையுமே தொண்டர் நிறுவனங்கள் தமது முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டியங்குகின்றன.

சாதாரண காலங்களை விட, இயற்கை அனர்த்தங்கள் நிகழும் போதும், போர், கலவரங்கள், வன்செயல்கள் நடக்கும் போதும் தொண்டர் நிறுவனங்களின் சேவை மிகவும் வேண்டப்படுவது உண்டு.

அதுவும், அரசாங்கத்தினால் எல்லா வகைகளாலும் புறக்கணிக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும், வேண்டுமென்றே தடைகளும், அழுத்தங்களும் போடப்பட்டும் தமிழ்ப் பிரதேசங்களில், தொண்டர் நிறுவனங்களின் - அரச சார்பற்ற நிறுவனங்களின் - அப்பழுக்கற்ற, மனிதாபிமானத் தொண்டு மிகவும் தேவைப்படுவதாகும்.

அந்த வகையில், யாழ் மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், தங்கள் மனிதாபிமானப் பணியை தமது வளங்களுக்கு உட்பட்ட அளவில் கடந்த பதினெட்டு மாதங்களாக - ஒன்றரை வருடங்களாக - மிகுந்த சேவை மனத்துடன் செய்து வருகின்றன.

எல்லாத் தொண்டர் நிறுவனங்களின் வளங்களையும் ஒன்று திரட்டி, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் தங்களுக்குரிய பணிகளை அர்த்தமுள்ள விதத்தில் செயலாக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் ஒரு வருடத்திற்கு முன்னர் உருவாக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் தொண்டர் நிறுவனங்கள் தமது வளங்களை மட்டுமன்றி, புலனையும் உள்ளிப்பாக ஒருசேர இணைத்து ஈர்த்துச் செயற்படுவது மிகவும் அவசியமாகும். அந்த வகையிலும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளன எனலாம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் உதவி குறைந்து குறைந்து வர, தொண்டர் நிறுவனங்களின் உதவி மேன்மேலும் அதிகமாகத் தேவைப்படும். இது விடயத்தில் வெளி நாடுகளில் தலைமையகங்களைக் கொண்டியங்கும் தொண்டர் நிறுவனங்களின் பங்கு பெரிதும் வேண்டப்படுவதாகும்.

மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதில் மன்றிய கவனம் செலுத்தப்படுவதுபோல, குடும்பத் தலைவர்களை இழந்து நிர்க்கதிக்குள்ளானோர், ஊனமுற்றோர் ஆகியோருக்கு புனர்வாழ்வு அளிப்பதிலும் அதிக அக்கறை எடுக்கப்பட வேண்டும். அதற்கான குறுகிய கால, நீண்ட காலத் திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்ட ரீதியில் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும்.

போர் நிலைமை தணியும் போது, புனர்வாழ்வுத் திட்டங்களுடன் மட்டும் நிற்காது, பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதில் தமது பங்களிப்பையும் அளிக்கும் விதத்தில், அரச சார்பற்ற நிறுவனங்கள் தன்மை தயார்ப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அனுமதி:

சொந்த மாவட்டங்களிலேயே நேர்முகப் பரீட்சை நடக்கும்

கொழும்பு, நவ. 15

அடுத்த வருடம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலேயே நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும். தூர இடங்களிலிருந்து நேர்முகப் பரீட்சைக்கான ஆசிரியர்கள் கொழும்புக்கு வருவதில் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருதிற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் தினங்கள் பற்றி பிராந்திய கல்விப் பணிப்பாளர் மூலம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்படும்.

வடக்கிலும் ஆசிரியர் கலாசாலை அனுமதிக்கான நேர்முகப் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [த]

மன்னிப்புச் சபை வேண்டுகோள்

கராச்சி, நவ. 15

பாகிஸ்தானில் சிறப்பு நீதி மன்றங்களினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட குறைந்தது 20 பேருக்கு பொதுமக்கள் முன்னிலையில் தண்டனை நிறைவேற்றப் படுவதை நிறுத்தி வைக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தத் தீர்ப்புகள் எவையுமே நியாயமான முறையில் விசாரிக்கப்படவில்லை என்று லண்டனிலுள்ள இந்த அமைப்புக் கூறியுள்ளது. (த)

வள்ளங்களுக்கு ஏற்பட்ட சேதம் ரூபா 30 கோடி

கொழும்பு, நவ. 15

வன்செயல் காரணமாக மன்னார் மாவட்டத்தில் 30 கோடி ரூபாவுக்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த மீன்பிடி வள்ளங்களும் மற்றும் உபகரணங்களும் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வாடி வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம் 90 லட்சம் ரூபாவுக்கு அதிகம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. [இ-எ]

கிராமசேவகர் பிரிவுகள் 7 ஆக வகுப்பு

கோப்பாய், நவ. 15

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் இயங்கும் 31 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் பொது மக்களின் வசதி கருதி 7 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொகுதிக்கும் பொறுப்பு வாய்ந்த கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். [இ-72]

நெல்லியடி மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம், நவ. 15

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் மகளிர் பிரிவாக 1976 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வந்த பாடசாலை கடந்த மாதம் 31 ஆம் திகதி முதல் நெல்லியடி மகளிர் கல்லூரி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது. (த)

பத்மநாபா கொலை வழக்கு: திருச்சி வழக்கறிஞரும் கைது

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா கொலை தொடர்பாக திருச்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் மருதநாயகம் என்பவர் கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பத்மநாபா கொலை தொடர்பாக விக்கி என்ற விக்கினேஸ்வரன் உட்பட 19 பேர் கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

விக்கினேஸ்வரன் பொலீஸாருக்கு வழங்கிய தகவலில் தாமும் இறந்த டிக்ஸன் மற்றும் சாந்தன், அருணா ஆகியோரும் திருச்சியில் தலைமறைவாக இருந்தபோது வழக்கறிஞர் மருதநாயகம் தமக்கு ஆதரவு வழங்கியதாகத் தெரிவித்திருந்தாராம்.

அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட மருதநாயகம் செங்கல்பட்டுக்குக் கொண்டுவரப்பட்டு நீதிபதி எஸ். எம். சித்திக் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதேவேளை —

அதிசக்தி வாய்ந்த வயர்லெஸ் கருவி திராமநாதபுரம் வரமகுடியில் வீடு ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்டது.

மாவட்ட அலுவலகத்தில் ஊழியராகப் பணியாற்றும் ஒருவரின் வீட்டிலிருந்து இந்தக் கருவி மீட்கப்பட்டது. [த]

5 பேரை சரணடையுமாறு நீதிமன்றம் உத்தரவு

சென்னை, நவ. 15

பத்மநாபா படுகொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட நீதிமன்றம் மேலும் 5 பேரைச் சரணடையுமாறு உத்தரவிட்டுள்ளது.

குணராஜன், சிவிந்தன், ரஞ்சன் அல்லது ராஜன், பிரேமா, நளினி ஆகியோரே இந்த ஐவருமாவார்.

கடந்த நவம்பர் மாதம் 4 பேரை சரணடையும்படி நீதிமன்றம் கோரி இருந்தது.

டேவிட், டானியல், நீலன், குண்டு சாந்தன் ஆகியோரே இவர்களாவர்.

பத்மநாபாவையும் அவரது சகாக்கள் 14 பேரையும் கொலை செய்த ஒழுங்கமைப்பின் செல்வராஜன் அல்லது ராஜன் என்பவரே ரி. எம். ஓ 3157 என்ற இலக்கம் கொண்ட வெள்ளைநிற அம்பாஸிடர் காரை கொடுத்ததாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளார். [இ-த]

தீர்வு காண்பதற்கான கதவு இன்னும் திறந்தே உள்ளது

விமானப்படைத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 15

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு அமைதித் தீர்வு ஒன்றுக்கு முன்வர வேண்டும். இதற்கான கதவு இன்னும் திறந்தே உள்ளது.

விமானப்படைத் தளபதி ரொனென் குணவர்தனா ஒரு வாரத்திற்கு முன்னர் 'சண்டே ஒப்சர்வரில்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

யாழ்ப்பாணம் மீது தரைத் தாக்குதல் நடத்தியது என்று பாதுகாப்புப் படையினர் முடிவு எடுப்பார்களானால், பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுவர்.

"படையினர் முன்னேறுவதைத் தடுக்க மனித கேடயத்தை யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் அமைத்து வருகிறார்கள். இவர்கள் பாதிக்கப்பட்டால் எம்மீது உலகம் பழிபோடும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். நாம் அப்பாவி மக்களைக் கொல்லவில்லை. இதனை உலகம் விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் நினைத்தால் எந்த நேரமும் யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசிக்க முடியும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-எ)

2 தமிழ்ப் பெண்கள் கைது!

கொழும்பு, நவ. 15

கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு சம்பந்தமாக விசாரணைக்கு நடத்திவரும் பொலீஸ் பிரிவு, சம்பவம்பிட்டிப் பொலீஸ் பகுதியிலுள்ள இரு தமிழ்ப் பெண்களைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி யுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த இரு பெண்களும் கொழும்பில் உள்ள அமைச்சு ஒன்றில் தொழில் புரிந்து வந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-த]

'லில்லி'யில் வந்த மழை நீரினால்

யாழ். மாவட்டத்திற்கென 'லில்லி' கப்பலில் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்கள் மழை நீர் உள்ளே நுழைவதால் பழுதடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலைப் பருப்பு, மரவள்ளி மாவு போன்றவையே பழுதடைந்த பொருள்களில் இவையும்; சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
(யாழ்/பெரியாஸ்பத்திரி)

கேள்வி விளம்பரம்

சலவை ஒப்பந்தம் - 1992 - 1993

யாழ்ப்பாண பொது வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளை 01-01-1992 தொடக்கம் 31-12-1992 வரை சலவை செய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் 29 - 11 - 1991 காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்கான உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். எனது பெயருக்கு ரூபா 150 ஐ வைத்தியசாலைக் காரியாலயத்திலிருந்து செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் நேரில் ஒப்படைக்கப்பட்டால் ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒப்பந்தகாரர் விரும்பினால் கேள்விப் பத்திரங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம்.

கேள்விப்பத்திரங்கள் அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாகப் பெற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் எவ்வாக வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவு திகதி அன்று காலை 10 மணிக்குப்பின் வரும் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர் பிணைப் பணமாக ரூபா 1000/- ஐ செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விப்பத்திரங்களில் மேல் செலுத்தப்பட்ட பணம் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 29 - 11 - 1991 காலை 10-00 மணிக்கு எமது காரியாலயத்தில் திறக்கப்படும்போது கேள்விதாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ பிரசன்னமாயிருக்கவேண்டும்.

மேலதிக விவரங்களை இவ் வைத்தியசாலையின் எனக்கூளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

[செல்வி]
டாக்டர் என் கனகரட்டினம்,
பணிப்பாளர்,
பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பொது வைத்தியசாலை:
யாழ்ப்பாணம்/13 - 11 - 1991. (இ-0899)

ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
1 - 3 - 1974

அரக்கனின் அழிப்பில்
15 - 11 - 1990

சதாசிவம் செல்வராணி (லதா)

முத்தவளே முழு மதியே
தாய் தந்தைக்கு தனையனாய்
தரணியில் வந்த செல்வா
கிப்பிக்குள் முத்தாக
கிவதங்கா மானாய்
அன்னை மடியில் பிறந்தவளே
அவ தரும் அன்பைப் பெற்றவளே
தேடிக் குறியார்த்து யமதூதனை அனுப்பி
பாச வடம் விரித்து பறித்தனோ - எம்
செல்வ லதாவை மைத்தனி தர்சியினை
நிங்கள் பத்திக்கோ தேம்பிய எழுந்தமர
பாவி வயிறுக்கோ பற்றியே எரியுதம்மா
பெற்றவரை உன் உடன் பிறந்தவரை
உற்றவரை உன் இனிய நம்பியரை
பாச வினைக்கே உன் பத்தம் அறுந்ததம்மா
ஆண்டொன்று ஆன போதும்
கழிந்திடா உங்கள் நினைவாக
நிலையான நாடி நரமும்
துதிக்கின்றோம் உங்கள் ஆத்மசாந்திக்காக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

பதுளை,
வாணரநகர். [18743]

யாழ். குடாநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ள நீர் பாய்ந்தோடுவதைக் காண முடிந்தது.

தாழ்த்த பகுதிகளில் இருந்த மண் வீடுகள் யாவும் பாதிப்புற்றுள்ளன. இதனால் அப் பகுதிகளில் இருந்த மக்கள் இடம்பெயர்ந்தனர்.

வங்கக் கடலில் உருவாகி, நாகப்பட்டணத்தைத் தாண்டிச் சென்ற புயலின் பக்க விளைவாகவே யாழ். குடாநாட்டில் பரவலாக கடும்காற்றுடன் கூடிய மழை பெய்தது என்று தெரிவிக்கப்பட்டது.

நிறைவு விழா

யாழ். இந்துக் கல்லூரி லயன்ஸ் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா, இன்று பிற்பகல் 2 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மூன்றாம் ஆண்டு நிறைவு மலர் வெளியீடும் இடம் பெறும். [ஒ]

18 நாளில் ஓய்வு!

இந்தியாவின் பிரதம நீதிபதியாராக கே. என். சிங் இம் மாதம் 25 ஆம் திகதி பதவி ஏற்க உள்ளார்.

இவரது பதவிக்காலம் டிசம்பர் 12 ஆம் திகதி முடிவடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். திரும்பவிருக்கிறார். அவர் யாழ். திரும்பும்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரின் உறவினர்களை தன்னுடன் அழைத்து வரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

பிறந்த நாள் வாழ்த்து

★ ஈசன் வசீதரன் ★

சுவிஸில் இருக்கும் ஈசன் - மஞ்சுளா தம்பதியினரின் தவப்புதல்வன் வசீதரன் [வகி] 15-11-91 இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை மம்மி, டடி, அங்கிள் [ஜீவன்] ஆகியோருடன் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை தாவடி அம்மம்மா, அம்மப்பா, சின்னமாமா, குட்டி மாமா, கரம்பகம் அம்மா, அப்பா, ஆசைமாமா, அளவெட்டி அப்பம்மா, மச்சாள் [சுபாசினி], பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், கொட்டடி பாட்டி, தாத்தா, சுற்றுளம் அத்தை ஆகியோர் விநாயகர் அருள்பெற்ற பல்லாண்டுகாலம் வாழ்வென வாழ்த்துகிறார்கள். (18740)

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு:
30-7-1959

உதிர்வு:
10-11 1990

அமரர் கந்தையா வரதராசன்

ஓடி மறைந்து நீ ஓராண்டு சென்றாலும்
அன்பின் அடிநாதமாய் ஆசானின் ஆலயமாயிருந்த-உம்
இனிய வதனமதைக் காணாது வாடுகின்றோம்
எல்லையிலா உமதன்பின் பெருமைகளை - ஓராண்டில்
சுவி மூலம் நாம் கூற வைத்திட்டீர்
கிள்ளைமொழி பேசும் பாலகரை வையகத்தில்
- தவிக்விட்டு

விண்ணுலகிற்கு ஏகிவிட்ட உம் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

எச்சாட்டி,
சுதுமலை தெற்கு,
மாவிப்பாய். (18749)

உணவு நெருக்கடி நிலையை..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பகுதி உள்ளூர் உற்பத்திகள் மூலமும், மக்கள் உணவைக் குறைத்துக் கொள்வதன் மூலமும் ஈடு செய்யப்படுகிறது.

இன்றைய நிலையில்— அதாவது பிற்திய நிலைப்பாடு என்னவெனில்—

கப்பல் மூலம் தருவிக்கப்படும் உணவுப் பொருள்கள் மட்டுமே இங்கு வந்து சேர்கின்றன. தரை மார்க்கமாக வருவது முற்றாகத் தடைப்பட்டுவிட்டது. அதனால் உணவுக்கு நெருக்கடி நிலை தோன்றியுள்ளது. அதனைச் சந்தோஷத்துக்கு இடமின்றி அறிந்து கொள்ள முடிகிறது.

கப்பல் வசதி

அரசாங்கம் உணவுப் பொருள்களை அனுப்பும் கப்பல்களில் தனியார் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பொருள்களும் அனுப்பப்படுவதாக அரசினர் அனுப்பும் பொருள்களின் அளவு குறைகிறது. இது தவிர்க்கப்பட வேண்டியது அவசியம்.

ஆனால் தனியார் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பொருள்களை அனுப்புவதற்கு தனியான கப்பல்களை ஏற்பாடு செய்யுமாறு கலியுறுத்த உள்ளேன்.

அந்தப் பொருள்களைப் பகுதிதிதுறையில் இறங்குவதற்கும் மாற்று ஒழுங்குகள் செய்ய முயற்சிகள் செய்யப்படும்.

தனியார் மற்றும் தொண்டர் நிறுவனங்களுக்குரிய பொருள்களைக் கொண்டு வரும் கப்பல், மிதவைப்படகு ஒன்றையும் கொண்டு வரவும்—

கப்பலை நடுக்கடலில் நிறுத்தி மிதவைப் படகுக்கு மாற்றி—

பின்னர் சிறு வள்ளங்களில் பொருள்களைக் கரைசேர்ப்பதுமே அந்த மாற்று ஒழுங்காகும்.

கொழும்பு திரும்பியதும் இவ்விடயங்கள் பிரதமர் அதிகாவிய சேவைகள் நயம், ஜனாதிபதியின் ஆலோசகர் ஆகியோர் உட்பட உயர்மட்ட அதிகாரிகளுக்கு நிலைமையை விளக்கி, நெருக்கடி நிலையைச் சீரான முழு அளவில் முயற்சிகள் மேற்கொள்வேன் —இவ்வாறு அவர் கூறினார். (அ-3)

இன்றைய..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறும்.

அந்த வகையில் இன்று (15 ஆம் திகதி) இரவு 7 மணிக்கு—

வலிகாமம் பிரிவில் — அரியாலை புங்குடுதீவு சனசமூக நிலையத்திற்கு அருகிலும், மாவிப்பாய் மெமோரியல் கல்லூரி மண்டபத்திலும்.

வடமராட்சிப் பிரிவில்— கரவெட்டி மகா வித்தியாலய மண்டபத்திலும்,

எழுச்சிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. [அ]

இன்று முதல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள மாவீரர் நினைவுக் குழுக்கள் மாவீரர் எழுச்சி வாரத்தில் கலந்துரையாடல்களையும், எழுச்சிக் கூட்டங்களையும் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

மாவீரர் வார நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்னர், அதற்கான புனிதமான சூழ்நிலையை உண்டு பண்ணுவதும், ஒவ்வொரு மாவீரர் நினைவாகவும் நினைவு நிழ்ச்சிகளை நடத்தி அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதுமே மாவீரர் எழுச்சி வாரத்தின் நோக்கமாகும் என்று மாவீரர் குழுவைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். [அ]

தவறிவிட்டது

13-11-1991 ஆம் திகதி இரவு 8 மணியளவில் கண்டி வீதியில் நாவற்குழிக்கும் நுணாவிலுக்குமிடையில் குட்டித்தணி பார்சலொன்றும் பாடசாலை யைவளங்கிய பார்சலொன்றும் தவறுதலாக விழுந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சாவகச்சேரியிலுள்ள எழில்மாடம் என்ற கடையில் அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள கிறீ உமா பாங்கி பலஸ் நவீன சந்தை என்ற கடையில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [18748]

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
11 - 07 - 1954

இறைவன் அடியில்:
07 - 11 - 1989

திதி:
15 - 11 - 1991

அமரர் கணபதிநாதன் சபாநாதன்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! இரண்டு ஆண்டுகள் மறைந்தும் உமது நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் ஆழமாகப் பதிந்துவிட்டன. உம்மை நினைந்து கலங்காத நாட்கள் இல்லை. உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்

இல. 177, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். [18745]

Printed by Udaya Printers (Pvt) Ltd. 292/2, Hospital Road, Jaffna. Published by the Proprietors Udaya Newspapers (Pvt) Ltd. 292/2, Hospital Road, Jaffna. Editor: Kandiah Mahesan.
15 • 11 • 1991 ஞாயிற்றுக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org